# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க,

# நீதித்துறை (திருத்தச்) சட்டம்

---

*[1983, ஒத்தோபர் மாதம் 4 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1983, ஒத்தோபர் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

***கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.***

***[illegible] சதம் 20*** ***தபாற் செலவு : சதம் 50***

# 1983 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

[1983 ஒத்தோபர் மாதம் 04 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 33/83

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1983 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

2. இதனகத்துப் பின்னர் " முதன்மைச் சட்டவாக்கம் " எனக் குறிப்பீடு செய்யப்படும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவானது இடப்படுகின்றது :—

'மேல் நீதிமன்றத்தின் அமைப்பு.

4. இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம், பதிவேட்டு நீதிமன்றமொன்ருக இருத்தல் வேண்டும் என்பதுடன், பின்வருவோர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :—

(அ) பத்துக்குக் குறையாதவர்களும் இருபதுக்கு மேற்படாதவர்களுமான நீதிபதிகள் ; இவர்கள் ஒவ்வொருவரும் " மேல் நீதிமன்ற நீதிபதி " என அறியப்படுதல் வேண்டும்;

(ஆ) அரசியலமைப்பின் 111அ என்னும் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்படுபவர்களான அத்தகைய மேல் நீதிமன்ற ஆணையாளர்கள்.'.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (3) அரசியலமைப்பின் 111அ என்னும் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்படும் மேல் நீதிமன்ற ஆணையாளர் ஒருவர் தவிர்ந்த மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் ஓய்வு பெறும் வயது அறுபத்தொன்ருகவிருத்தல் வேண்டும். ".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது, "அத்துடன் குறித்தொதுக்கலாம். " என்னும் சொற்களுக்குப் பதிலாக " அத்துடன் குறித்தொதுக்கலாம். அரசியலமைப்பின் 111அ என்னும் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்படும் மேல் நீதிமன்ற ஆணையாளர் ஒவ்வொருவரும் அவரது நியமன ஆணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நீதி நிருவாக வலயத்துக்குள் மேல் நீதிமன்றத்தின் அத்தகைய நியாயாதிக்கத்தைப் பிரயோகித்தல் வேண்டும். " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.